2020-21-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட (பக்கங்களின் எண்ணிக்கை : 2)

மாணவ-மாணவியருக்கு மட்டும்) SUBJECT CODE 20 UTM 407

REG.NO:

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி), பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : ஜீலை - 2022**

**பி.ஏ. தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 70**

**நான்காம் பருவம்** **நேரம் : 3 மணி**

**பகுதி – III**

**பொருளிலக்கணம் (அகப்பொருள் – புறப்பொருள்)**

**பகுதி – அ** **(10x1=10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **(K1)**

1. கைக்கிளை என்பது ________________

   (அ) பிரிவு (ஆ) உடன்போக்கு

   (இ) நொதுமலர் (ஈ) ஒருதலைக்காமம்

2. களவிற்குரிய கிளவிகள் எத்தனை?

   (அ) 13 (ஆ) 12 (இ) 7 (ஈ) 17

3. பின்வருவனவற்றுள் பாங்கற் கூட்டத்திற்குரியது______________

   (அ) பாங்கிற்கூட்டல் (ஆ) இரவுக்குறி

   (இ) வரைவிடை வைத்துப் பிரிதல் (ஈ) ஊடல்

4. கலவார் முனைமேற் செலவமர்ந்தன்று என்பது ______________

   (அ) வெட்சி அரவம் (ஆ) தும்பை அரவம்

   (இ) பாடாண் பாட்டு (ஈ) இயன்மொழி

5. தாபதர் தம் தவவொழுக்கத்திற் பிறழாது மேம்பட்டமை பற்றிக் கூறுவது________

   (அ) அரசவாகை (ஆ) வாடைப்பாசறை

   (இ) கூதிர்ப்பாசறை (ஈ) தாபதவாகை

பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க. (K2)

6. அகப்பொருளின் வகைகளைக் கூறுக.
7. இடந்தலைப்பாடு நிகழும் பாங்கைக் கூறுக.
8. பாங்கி மதியுடன்பாடு – விளக்குக.
9. வாள்நிலை என்றால் என்ன?
10. குடைமுல்லை என்பது எதனைக் குறிக்கின்றது?

(த.பி.பா.)

பகுதி – ஆ (5 x 4 = 20 மதிப்பெண்கள்)

பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K3)

11. அ) பெரும்பொழுதுகள் சிறுபொழுதுகள் யாவை?

(அல்லது)

ஆ) களவொழுக்கத்தின்கண் நிகழும் பிரிவுகள் பற்றி எழுதுக.

12. அ) பிரிவுழிக் கலங்கல் பற்றி விளக்கி அதன் விரியினைத் தெளிவுபடுத்துக.

(அல்லது)

ஆ) தலைவி எய்தும் புணர்ச்சியின் விரிவை விளக்குக.

13. அ) தலைவன் பாங்கனைச் சார்தலைச் சான்றுகாட்டி விளக்குக.

(அல்லது)

ஆ) முன்னுறவுணர்தல் என்றால் என்ன?

14. அ) பிள்ளை வழக்கு – சான்று காட்டி விளக்கு.

(அல்லது)

ஆ) போர்மலைதல் குறித்து விளக்கி எழுதுக.

15. அ) பின்தேர்க்குரவை பற்றிப் புறப்பொருள் வெண்பாமாலை கூறுவது யாது?

(அல்லது)

ஆ) தானை நிலை பற்றிச் சான்று தந்து விளக்குக.

பகுதி – இ (4x10=40 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களில் எவையேனும் நான்கனுக்கு மட்டும் விரிவாக விடையளிக்க. வினா எண். 16க்குக் கண்டிப்பாக விடையளிக்கவும். (K4 & K5)

16. முல்லைத்திணையின் கருப்பொருள்களைப் பட்டியலிட்டு விளக்கியுரைக்க.

17. கற்பியல் காட்டும் பிரிவுகள் பற்றி விவரித்தெழுதுக.

18. இரவுக்குறி குறித்து அகப்பொருள் கூறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

19. பாங்கற்கூட்டத்தின் முக்கியத்துவம் பற்றிக் கருத்துரைக்க.

20. வெட்சிப்படலம் காட்டும் போர்மரபு குறித்து விவரித்தெழுதுக.

21. வாகைத்திணையின் துறைகளைப் பற்றி விளக்கி எழுதுக.

***********